சேலம்–தருமபுரிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று பயணம்

சென்னை, செப். 28: பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின், புதன்கிழமை சேலம் செல்கிறார். தருமபுரிக்கு வியாழக்கிழமை செல்லும் அவர் அங்கும் அரசு நலத் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

சென்னையில் இருந்து சேலத்துக்கு விமானம் மூலம் காலை 8.30 மணிக்குப் புறப்படும் அவர், காலை 10 மணிக்கு அங்கு சென்றடைகிறார். சேலம் மாவட்டம் வாழப்பாடி செல்லும் அவர், அங்கு வரும் முன்காப்போம் என்ற மருத்துவத் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

இந்த நிகழ்வினைத் தொடர்ந்து, ஆத்தூர் செல்லும் அவர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் திறந்து வைப்பதுடன், இதர கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். நவீனப்படுத்தப்பட்ட தனியார் ஜவ்வரிசி ஆலைப் பிரிவைப் பார்வையிடும் அவர், ஜவ்வரிசிக்கான சில்லறை ஏலப் பிரிவினைத் தொடங்கி வைக்கிறார். மேலும், ஜவ்வரிசி ஆலை அதிபர்களுடன் அவர் கலந்துரையாடுகிறார்.

இதன்பின்பு, மாலை 4.20 மணிக்கு சேலம் கருப்பூர் செல்லும் அவர், சிட்கோவில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்கிறார். மேலும், அங்குள்ள விசைத்தறி கூட்டமைப்பினருடன் கலந்துரையாடுகிறார்.

தருமபுரி பயணம்: சேலம் பயணத்தை முடித்துக் கொண்டு, வியாழக்கிழமை தருமபுரி செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின், அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு கட்டடங்களையும், புதிய மருத்துவப் பிரிவுகளையும் தொடக்கி வைக்கிறார்.

ஒகேனக்கல் குடிநீர் திட்டம்: தருமபுரியில் உள்ள ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தைப் பார்வையிடுகிறார். அங்குள்ள நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்புப் பிரிவு ஆகியவற்றை ஆய்வு செய்கிறார். மாலை 3.45 மணியளவில் பழங்குடியினர் வசிக்கும் வத்தல் மலை பகுதிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் செல்லவுள்ளார். அங்கு பழங்குடியினர், விவசாயிகள் மற்றும் இதர பிரிவினரைச் சந்தித்து அவர்களுக்கான நலத் திட்ட உதவிகளை அளிக்கிறார். அனைத்து ஆய்வுப் பணிகளையும் முடித்து விட்டு, மாலை 5.30 மணிக்கு சேலத்தில் இருந்து விமானம் மூலமாக, சென்னை வருகிறார் முதல்வர்.

புதுவை உள்ளாட்சித் தேர்தலிலும் பாமக தனித்துப் போட்டி

புதுச்சேரி, செப்.28: தமிழகத்தைப்போல, புதுவை மாநில உள்ளாட்சித் தேர்தலிலும் தனித்துப் போட்டியிடுவதாக பாமக அறிவித்தது.

இதுகுறித்து புதுவை மாநில பாமக செயலரும், முன்னாள் எம்.பி.யுமான தன்ராஜ் புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் செவ்வாய்க்கிழமை கூறியதாவது:

அண்மையில் நடைபெற்று முடிந்த தமிழகம், புதுவை சட்டப் பேரவைத் தேர்தல்களில் பாமக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகித்தது.

இந்த நிலையில், உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக திங்கள்கிழமை நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் என்.ஆர். காங்கிரஸ், பாஜக, அதிமுக ஆகிய மூன்று கட்சிகள் கலந்து கொண்டன. கூட்டணியின் தலைவர் என்ற முறையில் புதுவை முதல்வர் என்.ரங்கசாமி, பாமகவுக்கு அழைப்பு விடுக்கவில்லை. கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் பாமக 10 இடங்களில் தனித்துப் போட்டியிடும் என அறிவித்த நிலையில், கூட்டணிக் கட்சியினர் கேட்டுக் கொண்டதன்பேரில், நாங்கள் போட்டியிடாமல் தியாகம் செய்து அவர்களுக்காக உழைத்தோம். ஆனால், தற்போதைய உள்ளாட்சித் தேர்தல் ஆலோசனைக் கூட்டத்துக்கு பாமகவுக்கு அழைப்பு விடுக்கவில்லை. இது, ஒரு சந்தர்ப்பவாத செயல்பாடு.

இதனால், புதுவை உள்ளாட்சித் தேர்தலில் அனைத்து இடங்களிலும் பாமக தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளது.

கடைசி வரை காத்திருக்காமல் தேர்தல் பணியில் தற்போதே இறங்கியுள்ளோம். உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட விரும்பும் பாமக நிர்வாகிகளிடமிருந்து விருப்ப மனுக்களையும் பெறத் தொடங்கியிருக்கிறோம் என்றார் அவர்.

குரூப் 4 தேர்வு: 2–ஆம் கட்ட சான்றிதழ் சரிபார்ப்பு–கலந்தாய்வு

சென்னை, செப். 28: குரூப் 4 தேர்வில் 2–ஆம் கட்ட மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு அக்டோபர் 11, 12 தேதிகளில் நடைபெற உள்ளது என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

குரூப் 4 பிரிவில் காலியாகவுள்ள பணியிடங்களுக்கு கடந்த 2019–ஆம் ஆண்டு செப்டம்பர் 1–ஆம் தேதி எழுத்துத் தேர்வு நடைபெற்றது.

விண்ணப்பதாரர்களின் மதிப்பெண்கள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. கலந்தாய்வு, சான்றிதழ் சரிபார்ப்புக்கான அழைப்புக் கடிதத்தை தேர்வாணைய இணையதளத்தில் இருந்தே பதிவிறக்கம் செய்யலாம். சான்றிதழ் சரிபார்ப்பு, கலந்தாய்வுக்கு வரத் தவறினால் அவர்களுக்கு மறு வாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது.

காலமானார்

கல்வியாளர் பாலா வி.பாலச்சந்திரன்

சென்னை, செப்.28: இந்தியாவில் மேலாண்மைக் கல்வியை வடிவமைத்தவர்களில் முதன்மையானவராகக் கருதப்படுபவரும், பிரபல கிரேட் லேக்ஸ் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவனருமான பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் (84) உடல்நலக் குறைவு காரணமாக அமெரிக்காவில் செவ்வாய்க்கிழமை காலமானார்.

புதுக்கோட்டை மாவட்டம் புதுப்பட்டியில் கடந்த 1937 ஜூலை 5–ஆம் தேதி பிறந்தவர். பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புகளை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முடித்தார்.

அமெரிக்காவில் நார்த்வெஸ்டன் பல்கலைக்கழகத்தின் கெல்லாஜ் ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மென்ட்டின் கணக்கியல், தகவல் மற்றும் மேலாண்மைத் துறையின் பேராசிரியராகச் செயல்பட்டுவந்தார்.

2004–ஆம் ஆண்டு சென்னைப் புறநகரில் மேலாண்மைப் பள்ளியைத் தொடங்கினார். கடந்த 17 ஆண்டுகளில் சுமார் 7,000 மாணவர்கள் கிரேட் லேக்ஸில் படித்துப் பட்டம் பெற்றிருக்கின்றனர். மத்திய அரசு பாலச்சந்திரனின் கல்விப் பணிகளைப் பாராட்டி கடந்த 2001–ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்துள்ளது. அவருக்கு, மனைவி வசந்தா பாலச்சந்திரன், மகன்கள் சுதாகர், திவாகர் ஆகியோர் உள்ளனர்.

முதல்வர் இரங்கல்: பாலச்சந்திரன் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், மேலாண்மைத் துறையில் சிறந்து விளங்கிய கல்வியாளரும், இந்தியாவின் பிரபல கிரேட் லேக்ஸ் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் நிறுவனருமான பேராசிரியர் பாலா வி.பாலச்சந்திரன் மறைவுற்ற செய்தியறிந்து பெரிதும் வேதனையடைந்தேன்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

வண்டலூர் பூங்காவுக்கு அவசரகால ஊர்தி

Tamilnadu Government Forest Department
WILDLIFE AMBULANCE
Arignar Anna Zoological Park
AAZP

ரெனால்ட் நிசான் நிறுவனம் சார்பில் பெருநிறுவனங்களுக்கான சமூகப் பங்களிப்புத் திட்டத்தின் கீழ் வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு வழங்கப்பட்டுள்ள அவசரகால ஊர்தி.

சென்னை, செப். 28: பெருநிறுவனங்களுக்கான சமூகப் பங்களிப்புத் திட்டத்தின்கீழ், வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு ரெனால்ட் நிறுவனம் சார்பில் அவசரகால ஊர்தி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த வண்டலூரில் வனத்துறை கட்டுப்பாட்டில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா செயல்பட்டு வருகிறது. இந்த பூங்காவில் 2,382 வன விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த பூங்காவின் பராமரிப்புக்கு பெருநிறுவனங்களுக்கான சமூகப் பங்களிப்புத் திட்டத்தின் கீழ் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ரெனால்ட் நிசான் தொழில்நுட்பம் மற்றும் வணிக மையம் இந்தியா லிமிடெட் சார்பில் பூங்காவில் பராமரிக்கப்படும் வன விலங்குகள் குறித்த தகவல் பலகைளைப் புதுப்பிக்கவும், விலங்குகளின் இருப்பிடங்களில் விலங்குகள் ஓய்வெடுக்க கொட்டகைகள், சோலார் விளக்குகள், 14 பேர் அமரும் மின்கல ஊர்திகள் இரண்டு என ரூ.1.25 கோடி மதிப்பிலான உதவிகளை அந்நிறுவனம் அண்மையில் வழங்கியுள்ளது. இதன் தொடர்ச்சியாக வன விலங்குகளுக்கான அவசரகால ஊர்தியை ரெனால்ட் நிசான் நிறுவனம் செவ்வாய்க்கிழமை வழங்கியது.

இதற்கான நிகழ்ச்சியில், ரெனால்ட் நிசான் நிறுவனத்தின் அதிகாரிகள், வனத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

உள்ளாட்சித் தேர்தல்: அக்.6, 9–இல் பொதுவிடுமுறை

சென்னை, செப். 28: விழுப்புரம், வேலூர், திருநெல்வேலி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் பகுதிகளில் அக்டோபர் 6, 9–ஆம் தேதியும், ஏனைய 28 மாவட்டங்களில் காலியாக உள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கான தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் பகுதிகளில் மட்டும் அக்டோபர் 9–ஆம் தேதியும் பொது விடுமுறை அளிக்கப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் அக். 6, 9 தேதிகளிலும், 28 மாவட்டங்களில் காலியாக உள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள் பதவிக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல் அக்டோபர் 9–ஆம் தேதியும் நடைபெற உள்ளது.

இந்தத் தேர்தல் வாக்குப் பதிவு நாளையொட்டி, பொது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை முதன்மைச் செயலர் பிறப்பித்த உத்தரவில், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தலையொட்டி, வாக்குப் பதிவு நடைபெற உள்ள பகுதிகளுக்கு மட்டும் அக்டோபர் 6, 9–ஆம் தேதியும், 28 மாவட்டங்களில் வாக்குப் பதிவு நடைபெறும் பகுதிகளில் மட்டும் அக்டோபர் 9–ஆம் தேதியும் பொதுவிடுமுறை அளிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 ரயில் நிலையங்களில் விரைவில் பேட்டரி வாகனம்

சென்னை,செப்.28: சென்னை பெரம்பூர், திருவள்ளூர், ஜோலார்பேட்டை, அரக்கோணம், காட்பாடி ஆகிய 5 ரயில் நிலையங்களில் விரைவில் பேட்டரி வாகனங்கள் இயக்கப்படவுள்ளன.

இதுகுறித்து தெற்கு ரயில்வேயின் சென்னை கோட்ட அதிகாரிகள் கூறியது: சென்னை ரயில்வே கோட்டத்தில்

பயணிகள் அதிகமாக வரும் ரயில் நிலையங்களில் பேட்டரி வாகன வசதியை ஏற்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதன்படி, பயணிகள் அதிகமாக வரும் சென்னை பெரம்பூர், திருவள்ளூர், ஜோலார்பேட்டை, அரக்கோணம், காட்பாடி ஆகிய 5 ரயில் நிலையங்களில் பேட்டரி வாகன வசதியை ஏற்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

அதில், அரசு அல்லது தனியார் நிறுவனமோ, தன்னார்வத்தொண்டு அமைப்புகளோ பங்கேற்று, தேர்வு செய்யப்படும் நிறுவனங்கள் பேட்டரி வாகனங்களை இயக்கலாம்.

இந்த பேட்டரி வாகனத்தின் ஒரு பகுதியில் விளம்பரம் செய்து கொள்ள அனுமதிக்கப்படும். இவற்றில் மாற்றுத்திறனாளிகள், முதியோர், நோயாளிகள் மட்டுமே பயணிக்க அனுமதிக்கப்படுவர். இதற்காக எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்படாது என்றனர்.

SBI **பாரத ஸ்டேட் பாங்கு**
ராஜா அண்ணாமலைபுரம் கிளை
எண். 19, புதிய எண்.12, 3வது குறுக்கு தெரு
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 28.
Ph: 9445861165 Email: sbi.01855@sbi.co.in

தங்க நகை ஏல அறிவிப்பு

இதனால் பொது மக்களுக்கு அறிவிப்பது யாதெனில் கீழ்கண்ட வாடிக்கையாளர் தங்க நகைகளின் பேரில் கடன் பெற்று கடனை உரிய காலத்தில் திரும்ப செலுத்தி நகைகளை மீட்க தவறிய காரணத்தால் பலமுறை நோட்டீஸ் அனுப்பியும், நேரில் சென்று தெரியப்படுத்திய பிறகும் கீழ்கண்ட நபர் எந்த ஒரு தகவலையும் தெரியபடுத்தவில்லை. எனவே 30-09-2021 அன்று வியாழக்கிழமை மாலை 03.00 மணிக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கிளையில் நகைகள் பகிரங்கமாக ஏலம் விடப்படும்.

கடன் எண்	கடன்தாரரின் பெயர் மற்றும் விலாசமும்	நகை விபரம் நிலுவைத் தொகை
39172141662	திரு. ரூத்ரகுமார் எண்.1189,29வது குறுக்கு தெரு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை - 41.	47.29 Gms Rs. 97,081/-

காரணம் ஏதும் குறிப்பிடாமல் எந்தவொரு அல்லது அனைத்து ஏலத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்க வங்கிக்கு உரிமையுண்டு

கிளை மேலாளர்

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

சொத்து சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்கள்)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், நிர்வாக அலுவலகம் : எண். 24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001 மற்றும் இதர இடங்களில் செயல்பட்டு வரும் கிளை அலுவலகங்களில் ஒன்றான **பிளாட் எண்.13, நேரு நகர், பொழிச்சலூர் மெயின் ரோடு, சென்னை, காஞ்சிபுரம் – 600074-ல்** செயல்பட்டு வரும் வங்கியின் கிளை அலுவலகத்திற்கும் 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டத்தின்படி அதிகாரபூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(2) & (12) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதி-3ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி கடன்தாரர்களாகிய **(1) M/s. SP என்டர்பிரைசஸ், உரிமையாளர் திரு. R. ஆனந்தன், எண்.61, ஆஞ்சநேயர் கோயில் தெரு, எஸ்ஸாப் பல்லாவரம், சென்னை – 600043, (2) திரு. R. ஆனந்தன் த/பெ. ராஜன், புதிய எண்.20, ஆஞ்சநேயர் கோயில் தெரு, ஈசா பல்லாவரம், சென்னை – 600043, (3) திருமதி A. உமா மகேஸ்வரி க/பெ. ராஜன், புதிய எண்.20, ஆஞ்சநேயர் கோயில் தெரு, எஸ்ஸாப் பல்லாவரம், சென்னை – 600043** ஆகியோர்களுக்கு **05-06-2021** தேதியிட்ட கேட்பு அறிவிப்பினையும் அதனைத் தொடர்ந்து **23-07-2021** தேதியிட்ட செய்தித்தாள் பிரசுரத்தினையும் அனுப்பி, அது கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து **60** நாட்களுக்குள் அந்த கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடன்பாக்கித் தொகையான **ரூ. 64,22,283/- (ரூபாய் அறுபத்து நான்கு லட்சத்து இருபத்து இரண்டாயிரத்து இருநூற்று எண்பத்து மூன்று மட்டும்)** மற்றும் **07-05-2021** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியுடன் திருப்பிச் செலுத்தி கடனைத் தீர்க்குமாறும் கோரியிருந்தார்கள்.

ஆனால், மேலே குறிப்பிடப்பட்ட சட்டபூர்வ அறிவிப்பு கிடைக்கப் பெற்றும் மேற்படி கடன் பாக்கியை கடன்தாரர்கள் செலுத்தத் தவறிவிட்டபடியால், கடன்தாரர்களுக்கும், மற்றும் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி சட்டம் 8வது விதியில் வழங்கப்பட்டுள்ள தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 27-09-2021 அன்று வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி தமது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டுள்ளார்.

எனவே, குறிப்பாக மேலே கூறப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுவாக பொது மக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள அடமானத்திலுள்ள அசையா சொத்து தொடர்பாக எந்த ஒரு நபரும் எவ்விதமான பேரமோ நடவடிக்கையோ வைத்துக்கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்-க்கு செலுத்தப்பட வேண்டிய கடன் பாக்கித் தொகையான **ரூ.68,20,443/- (ரூபாய் அறுபத்தெட்டு லட்சத்து இருபதாயிரத்து நானூற்று நாற்பத்து மூன்று மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் வரை **27-09-2021** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டி மற்றும் இதர செலவுகளையும் சேர்த்துச் செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்படி சட்டத்தின் பிரிவு 13, துணை பிரிவு (8)ல் உள்ள சொத்துக்களை மீட்பதற்கான கால அளவு குறித்த விதிகளை கடன்தாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

குறிப்பு: 1) எங்களது **309-பொழிச்சலூர் கிளை,** உங்களில் எண்.1 கொண்டவரது வேண்டுகோளின் பேரிலும், உங்களில் எண். 2 கொண்டவரது பிரதிநிதித்துவத்தின் பேரிலும், உரிமையாளர் என்ற முறையிலும், உங்களில் எண்கள் 2 & 3 கொண்டவர்கள் உடன் கடனாளிகளாகவும் விளங்குவதால் (FITL - ADHOC:501912090015621)-ன் கீழ் **13.5%** வட்டி விகிதத்தில் **31-08-2020** அன்று **ரூ.4,29,000/-** நீட்டிப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **29-12-2020 அன்று NPA** ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் **26-09-2021** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.5,00,330/- (ரூபாய் ஐந்து லட்சத்து முன்னூற்று முப்பது மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **27-09-2021** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியும்; கூடுதல் அபராத வட்டி **2.00%** மாதாந்திர வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

2) எங்களது **309-பொழிச்சலூர் கிளை,** உங்களில் எண்.1 கொண்டவரது வேண்டுகோளின் பேரிலும், உங்களில் எண். 2 கொண்டவரது பிரதிநிதித்துவத்தின் பேரிலும், உரிமையாளர் என்ற முறையிலும், உங்களில் எண்கள் 2 & 3 கொண்டவர்கள் உடன் கடனாளிகளாகவும், மற்றும் உங்களில் எண். 2 கொண்டவர் ஜாமீன்தாரராகவும் விளங்குவதால் (CUB OSL SPECIAL-BR:501812080061595)-ன் கீழ் **15.50%** வட்டி விகிதத்தில் **29-02-2020** அன்று **ரூ.10,00,000/-** நீட்டிப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **29-12-2020 அன்று NPA** ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் **26-09-2021** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.11,81,339/- (ரூபாய் பதினொரு லட்சத்து எண்பத்தோராயிரத்து முன்னூற்று முப்பத்து ஒன்பது மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **27-09-2021** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியும்; கூடுதல் அபராத வட்டி **2.00%** மாதாந்திர வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

3) எங்களது **309-பொழிச்சலூர் கிளை,** உங்களில் எண்.1 கொண்டவரது வேண்டுகோளின் பேரிலும், உங்களில் எண். 2 கொண்டவரது பிரதிநிதித்துவத்தின் பேரிலும், உரிமையாளர் என்ற முறையிலும், உங்களில் எண்கள் 2 & 3 கொண்டவர்கள் உடன் கடனாளிகளாகவும் விளங்குவதால் (FITL - ADHOC:501912090019076)-ன் கீழ் **14.00%** வட்டி விகிதத்தில் **23-11-2020** அன்று **ரூ.73,000/-** நீட்டிப்பு நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த கடன் கணக்கானது **29-12-2020 அன்று NPA** ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது மற்றும் **26-09-2021** அன்றுள்ளபடி கடன் நிலுவைத் தொகையானது **ரூ.82,845/- (ரூபாய் எண்பத்து இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஐந்து மட்டும்)** மற்றும் முழு கடன் தொகையையும் திருப்பிச் செலுத்தும் தேதி வரை **27-09-2021** முதல் மேற்கொண்டு மாத இருப்புக்கான வட்டியும்; கூடுதல் அபராத வட்டி **2.00%** மாதாந்திர வட்டியுடன் திருப்பி செலுத்த வேண்டும்.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களின் விவரம்
சொத்து - 1 : (ராஜன் மகன் திரு. R. ஆனந்தனுக்கு சொந்தமான சொத்துக்கள்)

அயிட்டம் - 1: காஞ்சிபுரம் மாவட்டம், தெற்கு சென்னை பதிவு மாவட்டம், பம்மல் துணை பதிவு மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, எண்.22, எஸ்ஸாப் பல்லாவரம் கிராமம், சர்வே எண்.49/2A1A1Dல் அமைந்துள்ள 490 ச. அடி அளவிலான பிளாட் எண்.61 பகுதி, அதிலுள்ள கட்டிடம் மற்றும் அனைத்து துண்டுகளும் பாகங்களும். அயிட்டம் 2 : காஞ்சிபுரம் மாவட்டம், தெற்கு சென்னை பதிவு மாவட்டம், பம்மல் துணை பதிவு மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, எண்.22, எஸ்ஸாப் பல்லாவரம் கிராமம், சர்வே எண்.49/2A1A1Dல் அமைந்துள்ள, கால்வாயின் மீதான பாங்கு உட்பட 490 ச. அடி பரப்பளவிலான பிளாட் எண்.61பகுதி, அதிலுள்ள கட்டிடம் மற்றும் அனைத்து துண்டுகளும் பாகங்களும்.

சொத்து - 2

காஞ்சிபுரம் மாவட்டம், தெற்கு சென்னை பதிவு மாவட்டம், பம்மல் துணை பதிவு மாவட்டம், தாம்பரம் தாலுக்கா, எண்.22, எஸ்ஸாப் பல்லாவரம் கிராமம், சர்வே எண்.49/2A1A1Dல் அமைந்துள்ள, 945 ச. அடி பரப்பளவிலான பிளாட் எண்.61 பகுதி, கால்வாயின் மீதான பாங்கு உட்பட மொத்தம் 980 ச. அடி பரப்பளவிலான நிலம், அதிலுள்ள 200 ச. அடி கீற்று வீடு மற்றும் அனைத்து துண்டுகளும் பாகங்களும். எல்லைகள் : வடக்கில் : சண்முகசுந்தரம் வீடு, தெற்கில் : ஆஞ்சநேயர் கோயில் தெரு, கிழக்கில் : மரகத வேலு வீடு, மேற்கில் : வெள்ளையம்மாள் வாங்கிய நிலம். அளவுகள் : கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் 70 அடி, தெற்கு பக்கம் 70 அடி; வடக்கு-தெற்காக கிழக்கு பக்கம் 13½ அடி, மேற்கு பக்கம் 13½ அடி. இந்த சொத்து தெற்கு சென்னை பதிவு மாவட்டம், பம்மல் துணை பதிவு மாவட்டத்திலுள் அமைந்துள்ளது.

இடம் : சென்னை, தேதி : 27-09-2021 அதிகாரபூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287,
போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com

டிரான்ஸ்டிராய் (இந்தியா) லிமிடெட் (கலைப்பு நடவடிக்கையின் கீழ்)
திருவள்ளூரில் நிலம் E-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

மாண்புமிகு NCLT, முதன்மை அமர்வு, தனது 18.09.2019 தேதியிட்ட உத்தரவின் மூலம் நியமித்துள்ள ட்ரான்ஸ்ட்ராய் (இந்தியா) லிமிடெட் ("TIL") நிறுவனத்தின் கலைப்பு அதிகாரி (Liquidator) பின்வரும் TIL நிறுவனத்தின் நிலங்களை "உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு", "உள்ளதெல்லாம் உள்ளவாறு", பின் தொடர்ச்சியாக எவ்விதமான பொறுப்பும் ஏற்க முடியாது" எனும் அடிப்படையில் விற்பனை செய்வதற்கான E-ஏல பொது அறிவிப்பினை இதன் மூலம் வெளியிடுகிறார்.

E-ஏல இணையதளமான iQuippo சர்விசஸ் லிமிடெட்-iQuippo வாயிலாக கலைப்பு அதிகாரி மூலம் விற்பனை செய்யப்படும்.

அமைவிடம்	சொத்தின் தன்மை	குறைந்தபட்ச விலை (ரூ.)	டேவணித் தொகை (ரூ.)	E-ஏல நாளும் நேரமும்
சர்வே எண். 160/2, காஞ்சிப்பாடி கிராமம் திருத்தணி மாவட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு.	முழு உரிமையுடன் ஒட்டியுள்ள நிலங்களோடு சேர்த்து மொத்தப் பரப்பளவு 7.5225 ஏக்கர்	ரூ. 2,63,50,000/-	ரூ. 13,17,500/- கணக்கில் சேர்த்தல் அல்லது வங்கி உத்தரவாதம் மூலம்	வியாழக் கிழமை 14 அக்டோபர் 2021, காலை 10.00 - பகல் 2.00 மணி.
சர்வே எண். 151/12, 151/9, 151/11 காஞ்சிப்பாடி கிராமம் திருத்தணி மாவட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு.				
சர்வே எண். 161/4, காஞ்சிப்பாடி கிராமம் திருத்தணி மாவட்டம், திருத்தணி வட்டம், திருவள்ளூர், தமிழ்நாடு.				

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. விலைப்புள்ளிதாரர் பதிவு, உறுதியளிப்பு படிவம் மற்றும் செயல்முறை அறிக்கை ஆகியன கிடைக்கும் இணையதளம். **http://www.transstroyindia.com/corporateprofile.html**
2. iQuippo-லிருந்து ஏல ஒருங்கிணைப்பாளர் திரு. ஹரிகுமார் - 99443 66165, **harikumar.t@iquippo.com**

தேதி: செப்டம்பர் 29, 2021
இடம்: ஹைதராபாத்

ஒம்/- Dr. G.V. நரசிம்ம ராவ், கலைப்பு அலுவலர்
IP Regn. No. IBBI/IPA-003/IP-N00093/2017-18/10893
Ph:+ 9823039766, Email: liquidator.til@in.ey.com

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் IDFC FIRST Bank
(முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட்
மற்றும் IDFC பேங்க் லிட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது)
CIN: L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8-வது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600031. தொ.பே: +91 44 4564 4000 | தொ.நு: +91 44 4564 4022.

பிற்சேர்க்கை-IV [விதி 8 (1)]
சுவாதீன அறிவிப்பு (அசையாசொத்துக்களுக்கானது)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர், IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் நிறுவனத்தின் (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் மற்றும் IDFC பேங்க் லிட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும், தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர், கூட்டுக்-கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் 1.ஸ்ரீ சாய் முருகா இன்டர்நெட், 2. ராஜா P 3. R சாந்தி ஆகியோருக்கு 19.06.2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை (DEMAND NOTICE) வழங்கி, அந்த அறிவிப்பு பெறப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் 11.06.2021 அன்றுள்ளபடியான தொகை ரூ.1,06,41,935.15/- (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து நாற்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து மற்றும் பதினைந்து பைசா மட்டும்) செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர், மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம் 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய விதிகள் 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை 24 செப்டம்பர், 2021 தேதியில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலர் தமது அடையாள சுவாதீனத்தில் (SYMBOLIC POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே, கடன்தாரர்கள், மற்றும் முக்கியமாக பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால், அது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட் நிறுவனத்திற்கு (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் மற்றும் IDFC பேங்க் லிட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) செலுத்த வேண்டிய கடன் பாக்கி ரூ.1,06,41,935.15/- (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து நாற்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து மற்றும் பதினைந்து பைசா மட்டும்) மற்றும் அதன்மீதான வட்டி சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனுக்கு ஈடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் பற்றி மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

அசையா சொத்து விவரம்

சொத்தும் அதன் அனைத்து முக்கியப் பகுதிகளும், அடுக்கக வீடு எண் B-3, முதல் தளம் B பிளாக் பரப்பளவு 1202 ச.அடி, (பொதுப்பகுதி மற்றும் கார் பார்க்கிங் உட்பட) மற்றும் பாகம் பிரிபடாத 630 ச.அடி பங்கு நிலம், மொத்த பரப்பளவு 13080 ச.அடி, பழைய சர்வே எண். 645, R.S.NO. 640/3a, T.S.NO.59, பிளாக் எண். 164, வேளச்சேரி கிராமம், Ags காலனி, 7வது தெரு, விநாயகபுரம் வேளச்சேரி, வேளச்சேரி, சென்னை-600042. எல்லைகள்: கிழக்கு: AGS காலனி, 10வது குறுக்குத் தெரு, T.S.No. 51 & 58, மேற்கு : நிலம் T.S.NO. 8 & 60, வடக்கு : AGS காலனி, 7வது தெரு & T.S.NO. 9, 15, 29, 50 & 7வது குறுக்குத் தெரு, தெற்கு: நிலம் T.S.Nos. 63, 64, 65, 66 & 67

ஒம்/-
தேதி : 24.09.2021 அதிகாரபூர்வ அலுவலர்
இடம் : சென்னை. IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிடெட்
கடன் கணக்கு எண் 5544288,10774413 & 32964479. (முன்னாள் கேபிடல் ஃபர்ஸ்ட் லிமிடெட் மற்றும் IDFC பேங்க் லிட்-நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது)

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
எழும்பூர் கிளை
44, ஹாலஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008, Ph: 044-28191580, 044-28191582

அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு (APPENDIX IV) (Rule 8(1))

பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழ் கையொப்பமிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்ட பிரிவு 13(12) மற்றும் விதி எண்.3-ன்படி **26.04.2021 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட** கடன் தொகையான **26.04.2021** அன்றுள்ளபடி ரூ.**19,21,557.41** மற்றும் திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளையும் சேர்த்து அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று **கடன்தாரர் / அடமானதாரர் / ஜாமீன்தாரர் Shri.பணக்கம் பாபு, 4/54A,** மாங்காளியம்மன் கோயில் தெரு, பரங்கிமலை, காஞ்சிபுரம், சென்னை-600106 (இனி கடன்தாரர்கள் என அழைக்கபடுவர்) **என்பவருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.**

கடன்தாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்தொகை முழுவதையும் செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்தாரர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின்படியும், **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை 28.09.2021 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன்தாரரோ அல்லது மற்ற பொது மக்களோ இந்த சொத்தில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் **அது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி-க்கு வந்து சேரவேண்டிய** கடன் தொகையான கடன் தொகையான **28.09.2021** அன்றுள்ளபடி ரூ.**20,15,871/-** (ரூபாய் இருபது லட்சத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்று மட்டும்) மற்றும் மேற்குறிப்பிட்ட தேதியிலிருந்து திரும்ப செலுத்தும் காலம் வரை ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, இதர செலவுகள், கோரிக்கை அறிவிப்பு வெளியிட்ட பிறகு கடன்தாரரால் செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருப்பின் அதுபோக, **சுவாதீனம் எடுத்த தேதிப்படி செலுத்த வேண்டிய கடன் நிலுவைத்தொகை** ரூ.**20,15,871/-** (ரூபாய் இருபது லட்சத்து பதினைந்தாயிரத்து எண்ணூற்று எழுபத்தொன்று மட்டும்) மற்றும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி வட்டி, கட்டணங்கள், இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர் கவனம் ஈர்க்கப்படுகிறது. (ஈடுபெற்ற சொத்து).

அசையா சொத்து விபரம்

சர்வே எண்.1862, பட்டா படி சர்வே எண்.1862/1B, பழைய G.L.R.S. எண்.314, புதிய G.L.R.S எண்.256/65, பரங்கிமலை கண்டோன்மெண்ட், ஆலந்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம்-600016, எண்.4/54A, மாங்காளியம்மன் கோயில் தெரு என்னும் முகவரியில் 990 சதுர அடி நிலம் மற்றும் தரைத்தளத்தில் 336.50 சதுர அடி கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: கமேஸ்வரி-க்கு சொந்தமான சொத்து (சர்வே எண்.1862), தெற்கு: ரத்தினம்-க்கு சொந்தமான சொத்து (சர்வே எண்.1862), கிழக்கு: மாங்காளியம்மன் கோயில் தெரு (சர்வே எண்.1862), மேற்கு: அந்தோணி-க்கு சொந்தமான சொத்து (சர்வே எண்.1862).

தேதி : 28.09.2021 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இடம் : சென்னை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

isarc
இந்திய SME அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்
(பெருநிறுவன அடையாள எண்: U67190MH2008PLC181062)
பதிவு அலுவலகம்: ஸ்வவலம்பன் பவன், C-11, G-பிளாக், பாந்த்ரா-குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை-400051., தொலைபேசி: 022-6753 1389, மின்னஞ்சல்: isarc@isarc.in, இணையத்தளம்: www.isarc.in

E-ஏல விற்பனை அறிவிப்பு
[விதி 6(2) & 8(6) ஆகியவற்றின் கீழ்]

ISARC FA-16-I/2011-12 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில் டிரிபியூன் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடர்பான நிதிச் சொத்துக்கள் தொடர்பாக. இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளவையும் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 (SARFAESI) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 8 & 9 ஆகியவற்றின் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தி ISARC-இன் (ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனம்) அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளவையுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்கள் e-டெண்டர்களை வரவேற்பதன் மூலம் "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டா" எனும் முறையில் வில்லங்கங்கள் ஏதும் இருப்பின் அவற்றுடன் சேர்த்து விற்பனை செய்யப்பட உள்ளன.

கடன்தாரர் பெயர்	டிரிபியூன் டெக்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிட்.
ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்கள் பெயர்	1. திரு.G.சுரேந்திர குப்தா 2. திருமதி G.சுனிதா குப்தா
நிலுவை விவரங்கள்	30.09.2017 நாள்படி ரூ.26,83,43,214/- (ரூபாய் இருபத்தாறு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்து மூன்றாயிரத்து இருநூற்றுப் பதினான்கு மட்டும்) இத்துடன் SARFAESI சட்டம், பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்பின்படி அதன் மேல் வட்டி மற்றும் இதர செலவினங்களுடன் சேர்த்து.
விற்கப்பட உள்ள சொத்துக்கள் / சொத்து விவரங்கள்	சொத்து விவரம் தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டடம், சர்வே எண் 284/2, நிலத்தின் பரப்பளவு 5.09 ஏக்கர், சேனபுத்தூர் கிராமம், கும்மிடிப்பூண்டி வட்டம், திருவள்ளூர் மாவட்டம்.
குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை (EMD)	குறைந்தபட்ச விலை (R.P) ரூ.1,33,31,800/- டேவணித்தொகை (EMD) ரூ.13,33,180/- டேவணித்தொகையானது குறைந்தபட்ச விலையில் 10% ஆகும். ஆர்வமுள்ள ஏலதாரர் / வாங்குநர் / பெறுநர் குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக சமர்ப்பிக்கும் ஏலக்கோரல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏல உயர்வுத் தொகை ரூ.50,000/-
இடத்தைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	அக்டோபர் 18, 2021 அன்று முற்பகல் 11 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் இடையில்
விலைகோரல் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள், நேரம் மற்றும் இடம்	அக்டோபர் 20, 2021 அன்று மாலை 04.00 மணி - இணையவழி முறையில் மட்டும்
E-ஏல நாள் மற்றும் நேரம்	அக்டோபர் 21, 2021 அன்று முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, தலா 5 நிமிடம் எண்ணிக்கை வரம்பற்ற காலநீட்டிப்புடன். ஏலத்தை "இணைய வழியில்" நடத்துவோர் ISARC-இன் அங்கீகாரம் பெற்ற சேவை வழங்குநரான M/s. C-1 இந்தியா பிரைவேட் லிட், உத்யோக் விகார், கட்டம் 2, கல்ப் பெட்ரோகெம் கட்டட எண் 301, குர்கான், அரியானா. அ.கு.எண்: 122015. உதவித் தொலைபேசி எண்: +91-124-4302020 / 21 / 22 / 23 / 24 அல்லது +91-9821690968, உதவி மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, இணையத்தளம்: https://www.bankeauctions.com.
இதர விவரங்கள்	https://www.bankeauctions.com இணையத்தளத்திலிருந்து இதர விவரங்களுடன் கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைத் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
நாள்: 29.09.2021 இந்திய SME அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்
இடம்: மும்பை ISARC FA-16-I/2011-12 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டி எனும் முறையில்

வெள்ளிதோறும் தினமணியுடன்...
வெள்ளி மணி